THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No. 223/2021** | **PW.9** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. சோபியா | | |
| Husband/Father | : திரு. சுரேன் | | |
| Village | : பணகுடி | | |
| Taluk | : ராதாபுரம் | | |
| Employment | : உதவி ஆய்வாளர் | | |
| Age | : 32 | Date: 29.06.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused absent. Petition filed and allowed. )**

<u>முதல் விசாரணை</u> :–

1. நான் தற்போது பணகுடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.12.2019 அன்று வள்ளியூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது தலைமை காவலர் முருகன் என்பவர் நிலைய பொறுப்பில் இருக்கும்போது புகார்தாரர் இசக்கியம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.377/2019 இ.த.ச பிரிவுகள் 294 பி, 427, 506(2) மற்றும் 4 of TNPHW Act படி வழக்கு பதிவு செய்து பின்னர் புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து கனம் வள்ளியூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை எனது விசாரணைக்கு வைத்தார்.

2. இவ்வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு

அன்றைய தினமே 7.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமசுப்பு மற்றும் ராமன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பின்னர் பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 மற்றும் 10 சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் பட்டியல் சாட்சி 9 ஐ விசாரித்து சேத மதிப்பு சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரியை அன்றைய தினமே 10.45 மணிக்கு வள்ளியூர் சித்ரா தியேட்டர் அருகே வைத்து காரணம் கூறி கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

3. சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும் எனது புலன் விசாரணையில் இருந்தும் எதிரி மீது குற்றம் உண்மை என தெரியவந்ததால் இ.த.ச பிரிவு 294 பி, 427, 506(2) மற்றும் 4 of TNPHW Act பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். ( **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3, பார்வை மகசர் அ.சா.ஆ.4, மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.5, சேத மதிப்பு சான்று அசாஆ.6, ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

4. புகார்தாரர் நீதிமன்றத்தில் தீர்ப்பு அவர்களுக்கு சாதகமாக வந்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அந்த தீர்ப்பு சம்பந்தமாக ஏதேனும் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மேற்படி சிவில் வழக்கு விபரம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. வழக்கின் எதிரி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்ட போது சம்பவ தாவா இடம் சம்பந்தமாக அசல் வழக்கு எண்.252/2008 ஆக வழக்கு எதிரி புகார்தாரர் கணவர் மீது வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருப்பதாக சொன்னார் என்றாலும் நான் வேண்டுமென்றே மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி சிவில் வழக்கு 28.08.2025 அன்றுதான் தீர்ப்பு எதிரிக்கு சாதகமாக

வழங்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. புகார்தாரர் சம்பவம் அவரது வீட்டின் முன்பு சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். எனது விசாரணையின்படி அவரது வீட்டிற்குள் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரிதான். எனது விசாரணைப்படி புகார்தாரர் வீட்டிற்குள் எந்த பொருட்களும் சேதப்படுத்தப்படவில்லை என்றால் சரிதான்.

5. புகார் மனுவில் சம்பவத்தின் போது வீட்டினுள் இருந்து வெளியே வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரம் இரவு 11 மணி என்றால் சரிதான். எனது விசாரணைப்படி சம்பவ இடத்தில் லைட் இருந்ததாக துலங்காது என்றால் சரியல்ல. தெரு விளக்கு இருந்துள்ளது. தெரு விளக்கு எரிந்ததாக துலங்காது என்றால் சரிதான். புகார்தாரர் அவரது வீட்டின் கதவை சேதப்படுத்தியதாகத்தான் புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் எனது விசாரணைப்படி புகார்தாரர் வீட்டின் கதவு சேதம் இல்லை என்றால் சரிதான். எனது விசாரணைப்படி முத்துகிருஷ்ணன் வீட்டின் கதவுதான் சேதம் அடைந்துள்ளது என்றால் சரிதான். அவரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் வீடானது யாதவர் தெற்கு தெருவில் தெற்கு பக்கம் உள்ளது. முத்துகிருஷ்ணன் வீடானது வடக்கு பக்கம் உள்ளது.

6. நான் வழக்கு பதிவு செய்த அன்றே சம்பவ இடம் சென்று பார்வையிட்டேன் என்றால் சரிதான். அப்போது முத்துகிருஷ்ணன் வீட்டின் கதவு உடைக்கப்பட்ட விபரம் பார்வை மகஜர், மாதிரி வரைபடத்தில் துலங்காது என்றால் சரிதான். அதுபோல் முத்துகிருஷ்ணன் வீட்டில் சம்பவம் நடந்ததாக துலங்காது என்றால் சரிதான். சேதமடைந்த கதவை கைப்பற்றி சேதத்தை மதிப்பீடு செய்ய நான் அனுப்பவில்லை என்றால் சரிதான். சேத மதிப்பு சான்று புகார்தாரர் வாங்கி

என்னிடம் கொடுத்தார் என்றால் சரிதான். சாட்சி கல்யாணசுந்தரம் என்பவரிடம் முத்துகிருஷ்ணன் என்பவர் கதவை சரி செய்ய கொடுக்கவில்லை என்றால் சரிதான். அசா1 தான் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் வழக்கை முறையாக விசாரணை செய்யாமல் ஒருதலைபட்சமாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் தயார் செய்தேன் என்றாலும் சரியல்ல. சேதம் அடைந்த கதவை நான் பார்வையிட்டதாக வழக்கு கோப்பில் துலங்காது என்றால் சரிதான்.

<u>**மறு விசாரணை :**</u>

இல்லை.

Sd/- Thiru.P.Moses Jebasingh,
Judicial Magistrate,
Valliyoor.

THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No. 223/2021** | **PW.8** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | : திரு.ராமன் என்ற ராமகிருஷ்ணன் | |
| Father/Husband | : திரு.மாசானம் | |
| Village | :வள்ளியூர் | |
| Taluk | : ராதாபுரம் | |
| Employment | : பால் வியாபாரம் | |
| Age | : 50 | Date: 29.06.2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed)**

<u>முதல் விசாரணை</u> :–

**1.** நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் பால் வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதல்ல. இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **(நீதிமன்ற கேள்வி– யாராவது உங்களை மிரட்டினார்களா என்றால் என்னை யாரும் மிரட்டவில்லை. நானாகவே சாட்சியம் அளிக்கிறேன்.)**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

2. போலீசார் விசாரணையில் கடந்த 26.12.2019 ஆம் தேதி 7.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்த வள்ளியூர் போலீஸார் எங்கள்

முன்னிலையில் வழக்கின் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் ஆய்வு செய்து பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், ராமசுப்பு என்பவரும் கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு வேண்டி உண்மையை மறைத்து அரசுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

3. இல்லை.

Sd/- P.Moses Jebasingh,

Judicial Magistate,
Valliyoor.